**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.128/2024</u>**

ம.சா.2 கோவிந்தசாமி த/பெ சாமுடி நாள் : 12.08.2026

**<u>1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

யார் அழைத்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வழக்கறிஞர் அழைத்ததால் வந்தேன். மனுதாரர் என்னுடைய ஊர்காரரர். விபத்து 11.11.2023 அன்று மாலை 6.30 மணியளவில் ஆலங்காயத்தில் இருந்து காவலூர் செல்லும் வழியில் உரம் வாங்கி கொண்டு கடை அருகே இடது புறமாக நின்று கொண்டிருந்தேன், கார் ஒன்று ஆலங்காயத்தில் இருந்து காவலூர்க்கு வேகமாக செல்லும் போது பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. மோதி காரின் பதிவு எண் தெரியவில்லை. காரை ஓட்டி வந்தவரின் பெயர் தெரியவில்லை. செந்தமிழ் தலைக்கவசம் அணிந்து பயணம் செய்யதாரா என்றால் தெரியவில்லை. விபத்திற்கு பிறகு நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தாகள். இந்த நீதிமன்றத்தை தவிர வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் நான் இல்லை என்றும், ஊர்காரரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.